தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 10, பவ - திருவள்ளுவர் ஆண்டு 2026

1995, மார்ச் 24, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு."

நீதிமுறைப்படி செங்கோல் செலுத்தும் நாட்டில் பருவ மழையும் குன்றாத விளைச்சலும் ஒருசேர ஏற்படுவனவாகும். (குறுக்கீடு)

1. இந்திய விடுதலை வீரர்கள் பகத்சிங், ராஜகுரு, சுக்தேவ் தூக்கிலிடப்பட்ட நாளை நினைவு கூர்தல்

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விநேரம் முடியட்டும், பிறகு சொல்லலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, இரங்கற் குறிப்பு ஒன்றை நான் ஒரே செகண்டில் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்திற்குப் பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எல்லோரும் என்னை மன்னித்துக் கொள்ள வேண்டும். ஜாலியன்வாலாபாக் படுகொலையைக் கண்டித்து பஞ்சாப் சிங்கங்கள் இராஜகுரு, பகத்சிங், சுக்தேவ் போன்றவர்கள் சில வெள்ளையர்களைத் திருப்பிச் சுடக்கூடிய நிலை ஏற்பட்டது. உடனே அவர்களை அரஸ்ட் செய்து அவர்களுக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றினார்கள். அந்தத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படக் கூடிய நிலையிலேதான் மகாத்மா காந்தி அவர்கள், இர்வின் பிரபுவோடு பேசி, அவர்களுக்குத் தூக்குத் தண்டனை வேண்டாம், அவர்கள் இளைஞர்கள், அவர்களுக்கு ஆயுள் தண்டனை கொடுங்கள் என்று கேட்டபோது, இர்வின் பிரபு, அது

முடியாது, அப்படிச் செய்வது என்றால் நான் இராஜினாமா செய்வேன் என்று சொன்ன காரணத்தினாலே, 1931 ஆம் வருடம் மார்ச் மாதம் 24 ஆம் தேதி காலை 7 மணிக்கு அவர்களுக்குத் தூக்கு என்று நிர்ணயம் செய்தார்கள். அதற்கு அந்த மூன்று இளைஞர்களும், நாங்கள் ஏன் இன்னும் 1 நாள் உயிரோடு இருக்க வேண்டும், எங்களை 23-ம் தேதியே தூக்கு மேடைக்கு அனுப்புங்கள் என்று சொன்னதால், 23-ம் தேதி இரவிலே அவர்களைத் தூக்கு மேடைக்கு அனுப்பி, அங்கு சென்ற உடனேயே அவர்களுக்கு கருப்புத் துணி அணிவிக்க வந்தார்கள். பகத் சிங், இராஜகுரு, சுக்தேவ் அந்த மூன்று இளைஞர்களும் அப்போது சொன்னார்கள். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இரங்கல் குறிப்பை மட்டும் சொல்கிறேன் என்றீர்கள் இப்படி பேசிக் கொண்டிருக்கக் கூடாது. இன்று அவர்களைத் தூக்கிலிடுவதாக இருந்த நாள், ஆனால் முதல் நாளே தூக்கிலிடப்பட்டு விட்டார்கள். எனவே, அதை நினைவுகூர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுங்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, 23 ஆம் தேதி தூக்கிலிடப்பட்ட அந்த இளைஞர்களை நினைவுகூர, சட்டசபையில் உங்களுக்கு வேண்டுகோளாக வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் தெரிவித்த கருத்துக்களோடு பேரவையின் கருத்துக்களாக என்னுடைய கருத்துக்களையும் இணைத்துக் கொள்கிறேன். இந்திய சுதந்திர வேள்வியில் ஈடுபட்டு, தங்களுடைய இன்னுயிரைத் துச்சமென மதித்து, தியாக வேள்வியில் குதித்த அந்த மாவீரர்களுடைய மறைவுக்கு இந்தப் பேரவையும், பேரவையின் சார்பில் தமிழக மக்களும் தங்களுடைய அஞ்சலியைச் செலுத்துகிறார்கள். அந்த மாவீரர்கள் மறைவுக்கு இந்தப் பேரவையின் சார்பிலும், நாட்டு மக்கள் சார்பிலும் நம்முடைய வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். அந்த மாவீரர்களுடைய தியாகத்தை என்றென்றும் நாம் மறவாமல் நினைவிலே வைத்து, அந்த மாவீரர்களுடைய தியாகத்தைப் போற்றுவோம் என்கிற உணர்வினையும் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.